Ti Nb Ir Ta Ru Pt

Ti Anode Fabricators Pvt. Ltd.
An ISO 9001 : 2008 Certified

Tiaano® Innovation In Inert Metals — 23 YEARS Since 1992

# 48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: +91 44 2278 1148 Fax: 22781362 Mob: +91 94445 69900 Email: marketing@tianode.com Web: www.tianode.com

**“கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா”**

## GOAL 2015-2016

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 156% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to Aug. 15 : 884 Nos.
  - Up to Jul. 15 : 877 Nos.
- **Performance Aug. 15 …**
  - Turnover growth : 5.47%
  - Employment growth : -1.10%
  - 100% Attendance : 16.48%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Treatment Equipments.

Fib Tec Composite – FRP/ GRP Equipments.

HydroGen – HHO Generators

Titanictrade – Portal for Exotic Metals

– Tiaano Vidyashrm (CBSE Curriculam)




## நன்றியால் நிறைந்திடு!

பள்ளியில் படித்துக்கொண்டிருந்த ஒரு ஏழை மாணவன் தன் கல்விச் செலவுக்காக சிறிய பொருட்களை வீடு வீடாக சென்றுவிற்று வந்தான். ஒரு நாள் மிகவும் பசியுற்று களைத்துப் போனான். தன் சட்டைப் பையில் கையை விட்டுப் பார்த்தபோது அதில் ஒரு பத்து பைசா நாணயம் மட்டுமே இருந்தது.

பசி வந்திட பத்தும் பறந்து போகும். இது உண்மை. தெருவில் தள்ளாடி தள்ளாடி நடந்து வந்துகொண்டிருந்த சிறுவன் அருகில் இருந்த வீட்டின் கதவைத் தட்டினான். பசிக்கு உணவு கேட்டு களைப்பைப் போக்கிக்கொள்ள வேண்டியதுதான் என்று முடிவு செய்துவிட்டான். கதவு திறந்தது! ஒரு இளம் பெண் நின்று கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் குழப்பமடைந்த பையன் உணவு கேட்பதை மறந்து தாகமாக இருக்கிறது குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள் என்றான். அவனை உற்று நோக்கிய பெண், சிறுவன் மிகவும் பசியாய் இருக்கிறான் என்று புரிந்துகொண்டாள். உடனே உள்ளே போய் ஒரு டம்ளர் நிறைய சூடான பால் கொண்டு வந்து கொடுத்தாள். மெதுவாக சுவைத்து பாலைக் குடித்தான். பின்பு மிகவும் தயக்கத்துடன் “நான் உங்களுக்கு எவ்வளவு காசு கொடுக்கவேண்டும்” என்று கேட்டான்.

அந்தப்பெண் புன்முறுவலுடன் “எனக்கு காசு எதுவும் கொடுக்க வேண்டியதில்லை. எங்கள் தாய் எங்களிடம் அன்புச் செயல்களுக்கு எந்த உபகாரமும் நாட வேண்டாம் என்று சொல்லித் தந்திருக்கிறார்கள்” என்று கனிவுடன் கூறினாள். உடனே அந்தப் பையன் உள்ளம் மிகவும் மகிழ்ந்தது. அந்தப் பெண்ணைப் பார்த்து, “அப்படியானால் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன்” என்று கூறி புன்முறுவலுடன் கடந்துசென்றான்.

பல வருடங்களுக்குப் பிறகு அந்தப் பெண் மிகவும் நோய்வாய்ப்பட்டாள். உள்ளூர் மருத்துவர்கள் கைவிட்டனர். எனவே ஒரு பெரிய பட்டணத்தில் உள்ள ஒரு புகழ்பெற்ற மருத்துவமனைக்கு அவள் கொண்டு போகப்பட்டாள். அவள் ஒரு விசித்திரமான நோயினால் பாதிக்கப்பட்டிருந்ததால், மிகவும் திறமை வாய்ந்த மருத்துவ நிபுணர் டாக்டர் ஹோவார்டு கெல்லி அழைக்கப்பட்டார்.

அவள் எந்த ஊரிலிருந்து வருகிறாள் என்பதைக் கேள்விப்பட்டதும், ஒரு இனம் புரியாத உற்சாகம் அவர் உள்ளத்தில் ஏற்பட்டது. உடனே விரைந்து புறப்பட்டு அவள் இருந்த அறைக்கு வந்தார். டாக்டர் அவளைப் பார்த்ததும் உடனே அவளை அடையாளம் கண்டு கொண்டார். எப்பாடு பட்டாகிலும் அவளை குணமடையச் செய்ய வேண்டும் என்று உறுதிபூண்டு மிகவும் கடினமாக உழைத்து அவளுக்குச் சிகிச்சை அளித்தார்.

நீண்ட கடினமான போராட்டத்துக்குப் பின் அவள் பூரண குணம் அடைந்தாள். அவளுடைய மருத்துவச் செலவுக்கான பில்லை தன்னிடம் பரிசீலனைக்காக அனுப்பி வைக்கும்படி கட்டளையிட்டார். அதைப்பார்த்துவிட்டு பில்லின் ஒரு புறத்தில் குறிப்பை எழுதி அந்தப்

## FUNCTIONAL WISHES



Gandhi Jayanthi
2nd October



Ayudha Pooja
21st October

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant: | Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel: 22294565 |
| ESI Corporation | Tambaram Dispensary |
| | Tel: 044 2226 0194 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



| | |
|---|---|
| **Mrs. R. Jayanthi**<br>Purchase | **10th Oct.** |
| **Mr. K. Venkatesan**<br>Project | **11th Oct.** |
| **Mrs. K. Shreemadhi**<br>HRD | **16th Oct.** |
| **Mrs. K. Easwari**<br>Coating | **21st Oct.** |
| **Mr. R. Martin Richard**<br>Project | **31st Oct.** |

**Best Wishes from Tiaano Employees**

## GOAL



Take up one idea.
Make that one idea your life.
Think of it, dream of it.
Live on that idea.
Let the brain, muscles, nerves,
Every part of your body
Be full of that idea
And just leave every other idea alone.
This the way to "SUCCESS".
And this is the way great spiritual giants are produced.
Others are mere talking machines.

- SWAMI VIVEKANANDA

பெண்ணிடம் அனுப்பினார். "இந்த தொகை முழுவதும் ஒரு டம்ளர்பால் மூலம் முற்றிலுமாகச் செலுத்தப்பட்டு விட்டது. டாக்டர் ஹோவார்டு கெல்லி" என்று எழுதப்பட்டிருந்தது.

அதைப் பார்த்த அந்த பெண்ணின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தோடியது. மிகுந்த மகிழ்ச்சியோடு இறைவனே! "உமக்கு நன்றி உம்முடைய தெய்வீக அன்பு மனிதரின் கரங்கள் மூலமாகவும் இதயம் மூலமாகவும் பொங்கி வழிகிறது" என்று நன்றியுணர்வோடு கூறினாள்.

*Compiled By : Ms. P. E. Nancy*
*Director – Admin*

### முயற்சி திருவினையாக்கும்

- தளராத முயற்சி உங்களுக்குள் உணர்ச்சியைத் தூண்டும். அதன் மூலம் இறை அருளாகிய திவ்ய ஒளி உங்கள் மீது படும்போது புத்துணர்வு பெறுவீர்கள்.
- எந்த நிலையிலும் கடவுளின் உதவியை பெற கற்றுக்கொள்ளுங்கள் அது அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டேயிருக்கும்.
- அச்சம் நோயை விட பயங்கரமானது. ஆபத்தும் கொண்டது. அதுவே உங்களிடமிருந்து களையப்படவேண்டிய முதல் குறைபாடு.
- உங்கள் தேவை அனைத்தையும் கடவுள் நிறைவேற்றுவார். உங்களிடமுள்ள பலவீனத்தைப் போக்கி நல்வழிப்படுத்தும் ஆற்றல் அவருக்கு மட்டுமே இருக்கிறது.
- முன்னேறுவதற்காகவே நாம் பூமியில் பிறந்திருக்கிறோம். ஒவ்வொரு நிமிடமும் நாம் முன்னேறாவிட்டால் வாழ்க்கையே சுவாரஸ்யமற்றதாகிவிடும்.
- உழைப்பே கடவுளுக்கு மிகவும் விருப்பமான பிராத்தனை. ஒரு போதும் மனிதன் மற்றவர் உழைப்பில் வாழ முற்படுவது கூடாது.
- முயற்சி, தன்னம்பிக்கை, உழைப்பு ஆகிய மூன்றும் உடைய ஒரு மனிதன் வாழ்க்கையின் இலட்சியத்தை அடைய முடியும்.
- எப்போதும் நல்லதையே எண்ணி செயல்படுகின்ற மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளுங்கள்.

*Compiled By : Mrs. M. Sudha*
*Marketing*

## VISION

Where the Vision is one year, cultivate Flowers.

Where the Vision is ten year, cultivate Trees.

Where the Vision is eternity, cultivate People.

### சாதிப்பவள் தாய்

ஒரு நாள் காது சற்று கேளாத நான்கு வயது சிறுவன் ஒருவன் தனது ஆசிரியர் எழுதிக் கொடுத்த குறிப்புடன் வீடு திரும்பினான். அவனது தாய்க்காக எழுதப்பட்ட அந்தக் குறிப்பில், "உங்கள் மகன் படிப்பதற்கு லாயக்கற்றவன், அவனைத் திரும்ப அழைத்துக்

## தெரிந்து கொள்வோம்

**Drinking water at the correct time Maximizes its effectiveness on the Human body:**

* 1 glass of water after waking up - helps activate internal organs.
* 1 glass of water 30 minutes before a meal - helps digestion.
* 1 glass of water before taking a bath - helps lower blood pressure
* 1 glass of water before going to bed - avoids stroke or heart attack.

### கருஞ்சீரகம்

- கருஞ்சீரகத்தை வறுத்துத் தூளாக்கி எண்ணெயில் ஊறவைத்துப் பிறகு மூக்கில் சொட்டுகள் விட்டால் கடுமையான ஜலதோஷம் நீங்கும்.
- 5 கிராம் கருஞ்சிரகத்தை தண்ணீருடன் கலந்து சாப்பிட்டால் சுவாசக்கோளாறு சீரடையும்.
- கருஞ்சீரகத்தை அரைத்துப் பத்துப் போட்டால் தலைவலிக்கு நல்லது.

### 21 Ways To Get Creative

- Listen to MUSIC
- Spend time with CHILDREN
- PEOPLE WATCH
- READ a Book
- Take a WALK
- Keep a JOURNAL
- EXERCISE
- TRAVEL
- Take a BREAK
- Take a SHOWER
- TALK to a Friend
- Turn the TV off
- Spend time in a GARDEN
- Change your PERSPECTIVE
- Wander around a LIBRARY
- Ask "WHY?"
- Get some SLEEP
- CLEAN a corner of your home
- Be OPEN-MINDED
- Make a DRAWING
- Go on a local ADVENTURE

கொள்ளுங்கள்" என்று எழுதியிருந்தது. அதைப் பார்த்த அந்த தாய், "என் மகன் ஒன்றும் முட்டாள் இல்லை. அவனுக்கு நானே கற்பிக்கிறேன்" என்று சொல்லி தன் மகனுடன் கூடவே இருந்து பொறுமையாக சொல்லிக் கொடுத்து நல்ல அறிவாளியாக ஆக்கினாள்.

அந்த காது கேட்காத சிறுவன் தான் பின்னாளில் ஒரு உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானியாக ஆனான். அவன் தான் Thomas Alwa Edison.

தாய் என்பவள் தனது குழந்தைக்காக எதையும் சாதிப்பவள்.

### புத்தியை தீட்டு

ஒரு காட்டிற்கு இரண்டு மரவெட்டிகள் சென்றார்கள், மாலை மீண்டும் இருவரும் கூடும் போது ஒருவரிடம் அதிக விறகும் மேலும் அவர் அதிக களைப்படையாமலும் இருந்தார். மற்றொருவருக்கோ பயங்கர ஆச்சர்யம். நம்மை போல தானே அவனும், அவனால் மட்டும் இப்படி இது சாத்தியமானது என்று ஆர்வம் தாங்காமல் அவனிடமே கேட்டுவிட்டான்!.

இந்த விறகுகளுக்காக நீ என்ன செய்தாய் என்று! அவன் சொன்னான், இடைவிடாமல் வெட்டி கொண்டே இருந்தேன் என்று...சிறிதும் ஓய்வு இல்லாமலா என்று கேட்டான் நண்பன். ஆம். அதிக விறகுகள் பெற வேண்டுமே ஆனால் நீ கொஞ்சமும் களைப்படையாமல் இருப்பது எப்படி என்று கேட்டான். நான் இடையில் அடிக்கடி ஓய்வு எடுத்து கொள்வேன் என்று சொன்னான் நண்பன்.

மறுநாள் அவனும் அதே போல் ஓய்வு எடுத்து மரம் வெட்டினான், இருப்பினும் அவனால் நண்பன் அளவுக்கு மரம் வெட்டமுடியவில்லை. மறுநாள் மரம் வெட்டும் போது ஒளிந்திருந்து பார்க்க வேண்டும் என்று திட்டமிட்டு வீடு திரும்பினான்.

மறுநாள் மரம் வெட்ட பிரிந்து சென்ற பின், அவன் நண்பனை பின் தொடர்ந்து சென்றான். நண்பன் அரைமணி நேரம் மரம் வெட்டி விட்டு ஓய்வாக அமர்ந்தான். ஆனால் அவன் ஓய்வு நேரத்தில் அவனது கோடாலியை தீட்டி கொண்டிருந்தான்!.

*Collected from Internet*

### நம்பித்தான் ஆகவேண்டும்

### 5S (தொடர்ச்சி XLV)

**இரண்டடி உலகம்**

இந்த ஆய்வின் இறுதியில், அதுவரை இப்படி சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், பணியிடத்தில் இருக்கும் ஒவ்வொரு பொருளைப்பற்றியும் சில கணக்குகளைப் போடவேண்டும்.

1. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பொருள் / கருவி / உபகரணத்தின் பெயர்.
2. இந்தக் காலகட்டத்தில் (உதாரணம்: பதினைந்து நாள்கள்) எத்தனை முறை பயன்படுத்தப்பட்டது?
3. சுராசரியாக ஒரு நாளைக்கு எத்தனை முறை பயன்பட்டது?
4. இதனை அதிகம் பயன்படுத்துகிற தொழிலாளி / பிரிவு.
5. ஒவ்வொருமுறையும் சராசரியாக எவ்வளவு நேரம் பயன்படுத்தப்பட்டது?

## கவிதைகள்

### கனவுகள்

கனவு காணுங்கள்
பின் அக்கனவுகளை வரைபடமாய்
மனதளவில் பதிவு செய்யுங்கள்;
பின் அந்தக்கனவை படிப்படியாய்
நிறைவேற்ற
உங்களையே அர்பணித்து விடுங்கள்;
அக்கனவுகள் நிச்சயம் நிறைவேறும்!
ஆனால் ஒன்று, உங்கள் கனவுகள் —
உன்னதமானவையாக இருக்கட்டும்!

### Dear Dad

I seldom take the time to tell you
All the things I feel.
I want to tell you that my love
For you is very real.
I'll long appreciate your many
Kind and thoughtful deeds
You've always been so sensitive
Responding to my needs.
I feel that you are special;
Let me thank you from my heart
For all your treasured wisdom
And the warmth that you impart.
I always will respect you for
The ways in which you care.
It's reassuring knowing that
Your love is always there.

### வெற்றி நிச்சயம்

பூக்கள் உதிர்ந்து விழும் என்பதற்காக
மரங்கள் வருத்தப்படுவதில்லை
தென்றல் நின்று போகும் என்பதற்காக
மலர்கள் வருத்தப்படுவதில்லை
நிலவு தேய்ந்து விடும் என்பதற்காக
வானம் வருத்தப்படுவதில்லை
பிறகு ஏன் மனிதா!
நீ மட்டும் தோல்விகண்டு
துவண்டு போகிறாய்?

## சிந்தனைக்கு

அரசியல் வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் ஒருவன் சுதந்திரம் பெறலாம். ஆனால் ஆசைகளுக்கும் கோபத்திற்கும் அவன் அடிமையாக இருந்தால் உண்மையான சுதந்திரத்தின் தூய இன்பத்தை அவனால் உணர முடியாது.

*Compiled By : Mrs. R. Jayanthi*
*Purchase*

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.

– Editor

6. இந்தக் கருவி உரிய இடத்தில் இல்லை என்று யாராவது தேடினார்களா, காத்திருந்தார்களா? ஆம் எனில், எவ்வளவு நேரம்?

இந்த விவரங்கள் அனைத்தையும், நாம் சேகரித்தருக்கிற தகவல்களிலிருந்து நேரடியாகப் பெற்றுவிட முடியும். அதன்பிறகு எந்தப் பொருள் யாருக்கு முக்கியம் என்பது தெளிவாகத் தெரிந்துவிடும்.

உதாரணமாக, லேத் இயந்திரங்களில் பணிபுரிகிற எல்லாத் தொழிலாளிகளுக்கும் ஒரு குறிப்பிட்ட கருவி அடிக்கடி தேவைப்படலாம். வீட்டில் உட்கார்ந்து டிவி பார்க்கிற எல்லோருக்கும் ரிமோட் அடிக்கடி தேவைப்படலாம்.

'அடிக்கடி' என்றால், எவ்வளவு அடிக்கடி? — இதுதான் அடுத்த கேள்வி. சராசரியாக, ஒரு தொழிலாளியால் ஒரு நாளைக்கு இருபது முறைக்கு மேல் பயன்படுத்தப்படும் கருவிகள், கைக்கெட்டும் தூரத்தில் இருந்தாக வேண்டும் என்பது ஓர் அனுபவக் கணக்கு.

ஏனெனில், அடிக்கடிப் பயன்படுத்துகிற அந்த கருவியைத் தேடி, அவர் சில அடி தூரம் நடந்து திரும்ப வேண்டியிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம்.

இதற்கு சுமார் ஒரு நிமிஷம் செலவாகிறது. தினந்தோறும் இப்படி இருபது முறை அவர் நடந்தால், இதிலியே இருபது நிமிஷம் வீணாகிவிடும். இப்படி நேரடியாக நேரம் வீணாவது ஒருபக்கமிருக்க, பணிக்கு நடுவே இப்படி வேறு இடங்களுக்குச் சென்று திரும்புவதால், தொழிலாளருடைய கவனம் சிதறுகிறது.

எதிர்ப்படுகிற யாரேனும், 'என்னய்யா, எப்படி இருக்கே?' என்று விசாரிப்பார்கள். 'ஒரு டீ சாப்பிடலாம், வாயேன்!' என்று அழைப்பார்கள். அவர்களுக்குப் பதில் சொல்வதில் இன்னும் நேரம் விரயம்.

தவிர, சுறுசுறுப்பாக ஒரு வேலையை செய்து கொண்டிருக்கும் போது, இடையில் இப்படி ஏதோ ஒரு காரணத்துக்காகக் கவனம் கூர்மையாவதற்குச் சில நிமிஷங்களாவது பிடிக்கும். அதுவும் நேர விரயம்தான்.

தொடரும்...

